டிசம்பர்–2023 முதல் மே–2024 வரை மேலும் ஆறு மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay Authorization for the month of December 2023 to May 2024)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித எண்.14014/பக7(1)/2023 – 1, நாள் 13–12–2023

அனுப்புநர்

திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்

மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35
முதன்மைச் செயலர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
சார் சம்பளக் கணக்கு அலுவலர், பெருநகர் சென்னை மாநகராட்சி
சென்னை – 03.

ஐயா,

**பொருள்** பள்ளிக் கல்வி– தொழிற்கல்வி – தற்காலிக பணியிடங்கள்– 94 தொழிற் கல்வி ஆசிரியர் நிலை–1 தற்காலிக பணியிடங்கள்– டிசம்பர்–2023 முதல் மே–2024 முடிய 6 மாத காலத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 358, பள்ளிக் கல்வித் துறை, நாள். 18.08.1997.
2. அரசு கடித (நிலை) எண். 221, பள்ளிக் கல்வித் (வி.இ) துறை, நாள். 15.07.1999
3. அரசாணை (2டி) எண். 46, பள்ளிக் கல்வித் (வி.இ) துறை, நாள். 12.09.2006
4. அரசாணை (நிலை) எண். 69, பள்ளிக் கல்வித் துறை, நாள். 20.03.2007.
5. அரசாணை (1டி) எண். 245, பள்ளிக் கல்வித் (ப.க.7(1) துறை, நாள். 10.12.2021.
6. பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதம் ந.க.எண். 036847/எல்/ இ3/2022, நாள். 3.10.2022
7. அரசு கடித எண்.7726/ப.க.7(1)/2023, நாள்.27.06.2023.
8. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.036847/எல்/ இ3/2022, நாள். 31.10.2023.
9. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.036847/எல்/ இ3/2022, நாள். 08.12.2023.

******

பார்வை 1 முதல் 3 வரையுள்ள அரசாணைகள் மற்றும் கடிதத்தின்படி தோற்றுவிக்கப்பட்ட 680 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–2 பணியிடங்கள், பார்வை4–இல் கண்ட அரசாணையின்படி தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–1 பணியிடங்களாக தரமுயர்த்தப்பட்டன. மேற்கண்ட பணியிடங்களில் ஓய்வு பெற்றவர்கள் போக மீதமுள்ள 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–1

பணியிடங்களுக்கு பார்வை 5-இல் கண்ட அரசாணையின்படி 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 115 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-1 பணியிடங்களில் தற்போது ஓய்வு பெற்ற 21 பணியிடங்கள் போக மீதமுள்ள 94 பணியிடங்களுக்கு 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்க பார்வை 6 காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் அரசை கோரியிருந்தார். ஏற்கனவே 01.10.2022 முதல் 31.12.2022 வரை 3 மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் மேற்காண் 94 பணியிடங்களுக்கு தொடர்ந்து ஊதியம் பெற அனுமதிக்கப்பட்டது என்றும், பார்வை 7ல் கண்ட அரசுக் கடித்தின்படி ஜுன்-2023 முதல் நவம்பர்-2023 வரை ஆறு மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவித்து மேற்கண்ட பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்புக் கோரி அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் இருப்பதால் தற்போது டிசம்பர்-2023 முதல் மே-2024 வரை ஆறு மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குமாறு பார்வை 9-இல் கண்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. இந்நேர்வில் 94 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-1 பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவானது, அரசாணை (டி) எண். 271, நிதி (சிஎம்பிசி) துறை, நாள். 18.08.2022-ன்படி அமைக்கப்பட்ட குழுவின் முன் 09.03.2023 அன்று வைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இவ்வாணையின் இணைப்பில் காணும் 94 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-1 பணியிடங்களுக்கு டிசம்பர் 2023 முதல் மே 2024 வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay authorization) வழங்கப்படுகிறது. மேற்கண்ட பணியிடங்களுக்கான டிசம்பர் 2023 முதல் மே 2024 வரையிலான ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக்கொண்டு ஊதியம்பெற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

3. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.14014/ப.க.7(1)/2023, நாள்.18.12.2023-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக

18/12/23

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம் கல்லூரி சாலை, சென்னை – 6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

அரசு கடித எண். 14014/பக7(1)/2023 -1 , நாள்.13.12.2023- இன் இணைப்பு

அரசாணை (நிலை) எண்.358 பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.08.1997, மற்றும் அரசு கடிதம் (நிலை) எண்.221, பள்ளிக்கல்வி (வி.இ) துறை, நாள் 15.07.1999, அரசாணை(2டி) எண்.46, பள்ளிக்கல்வித் (வி.இ) துறை, நாள் 12.09.2006-ன்படி உருவாக்கப்பட்டு தற்போது ஊதிய கொடுப்பாணை வழங்கப்படும் 94 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-1 பணியிடங்களின் விவரம்

புதிய ஊதிய விகிதம் ஊதியம் ரூ.36400-ரூ. 115,700 (நிலை 16)

| வ. எண் | மாவட்டம் | பள்ளிகளின் வரிசை எண் | பள்ளிகளின் பெயர் | பள்ளி வாரியாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | பணிபுரியும் ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | | | | 9 |
| | கன்னியாகுமரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் | 2 | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரல்வாய்மொழி | 1 | |
| | | 3 | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் | 1 | |
| | | 4 | உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, கல்லுபாலம் | 1 | |
| | | 5 | புனித அலோசியஸ் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்துறை | 2 | |
| | | 6 | எல். எம். எஸ். (ம) மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் | 2 | |
| | | | மொத்தம் | 9 | |
| 2 | திருநெல்வேலி | | | | 5 |
| | திருநெல்வேலி | 1 | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி சங்கரன்கோவில். | 1 | |
| | | 2 | கோ.நா.அரசு மேல்நிலைப் பள்ளி, குருவிகுளம். | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, வள்ளியூர். | 1 | |
| | | 4 | ச.ரெ.அரசு மேல்நிலைப்பள்ளி, நாங்குநேரி. | 1 | |
| | | 5 | அமலி (ம) மேல்நிலைப்பள்ளி, இருதயகுளம் | 1 | |
| | | மொத்தம் | | 5 | |
| 3 | தூத்துக்குடி | | | | 2 |
| | தூத்துக்குடி | 1 | சாமி அய்யா நாடார் மேல்நிலைப்பள்ளி, நாகலாபுரம் | 1 | |
| | | 2 | காரப்பேட்டை நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி | 1 | |
| | | | மொத்தம் | 2 | |
| 4 | இராமநாதபுரம் | | | | 4 |
| | இராமநாதபுரம் | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, கடுக்காய்வலசை | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, தேவிபட்டிணம் | 1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இராமநாதபுரம் | 3 | ஆர்.எஸ். அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, பரமக்குடி | 1 | |
| | | 4 | ஷத்திரிய நாடார் (ஆ) மேல்நிலைப் பள்ளி, கமுதி | 1 | |
| | | | மொத்தம் | 4 | |
| 5 | சிவகங்கை | | | | 2 |
| | சிவகங்கை | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, அ.முறையூர் | 1 | |
| | | 2 | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை. | 1 | |
| | | | மொத்தம் | 2 | |
| 6 | மதுரை | | | | 4 |
| | மதுரை | 1 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, மதுரை. | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி, சமயநல்லூர் | 2 | |
| | | 3 | சௌராஷ்டிரா மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை | 1 | |
| | | | மொத்தம் | 4 | |
| 7 | திண்டுக்கல் | | | | 2 |
| | திண்டுக்கல் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கன்னிவாடி | 1 | |
| | | 2 | நேருஜி நினைவு நகரவை மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல் | 1 | |
| | | | மொத்தம் | 2 | |
| 8 | நீலகிரி | | | | 2 |
| | நீலகிரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, உதகை | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, காத்தாடிமட்டம் | 1 | |
| | | | மொத்தம் | 2 | |
| 9 | கோயம்புத்தூர் | | | | 1 |
| | கோயம்புத்தூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி வெள்ளக்கிணர், கோயம்புத்தூர். | 1 | |
| | | | மொத்தம் | 1 | |
| 10 | திருப்பூர் | | | | 1 |
| | திருப்பூர் | 1 | கே.எஸ்.சி.அரசு மேல்நிலைப் பள்ளி | 1 | |
| | | | மொத்தம் | 1 | |
| 11 | ஈரோடு | | | | 4 |
| | ஈரோடு | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மொடக்குறிச்சி | 2 | |
| | | 2 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சிவகிரி | 1 | |
| | | 3 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பெருந்துறை | 1 | |
| | | | மொத்தம் | 4 | |
| 12 | சேலம் | | | | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேலம் | 1 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன்பாளையம் | 1 | |
| | | 2 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன்பாளையம், சேலம் –636109 | 1 | |
| | | 3 | நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, குகை, சேலம் – 6 | 1 | |
| | | 4 | சிறுமலர் மேல்நிலைப்பள்ளி , சேலம் – 636007. | 2 | |
| | | 5 | செங்குந்தர் மகாசன மேல் நிலைப் பள்ளி, தாரமங்கலம் | 2 | |
| | | 6 | நீலாம்பாள் சுப்ரமணியம் மேல்நிலைப்பள்ளி, சூரமங்கலம், சேலம் – 5 | 1 | |
| | | 7 | புனித மரியன்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி, சேலம்–636009 | 1 | |
| | | | மொத்தம் | 9 | |
| 13 | நாமக்கல் | | | | 3 |
| | நாமக்கல் | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, கந்தம் பாளையம் | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, அண்ணாசாலை, இராசிபுரம் | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப் பள்ளி, பாலப்பட்டி | 1 | |
| | | | மொத்தம் | 3 | |
| 14 | கிருஷ்ணகிரி | | | | 6 |
| | கிருஷ்ணகிரி | 1 | அரசு மேல்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டிணம் (ஆண்கள்) | 2 | |
| | | 2 | அரசு மேல்நிலைப் பள்ளி, போச்சம்பள்ளி (ஆண்கள்) | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப் பள்ளி, நாகசரம்பட்டி (ஆண்கள்) | 1 | |
| | | 4 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஓசூர் (மகளிர்) | 1 | |
| | | 5 | அரசு மேல்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டிணம் (மகளிர்) | 1 | |
| | | | மொத்தம் | 6 | |
| 15 | தருமபுரி | | | | 1 |
| | தருமபுரி | 1 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி | 1 | |
| | | | மொத்தம் | 1 | |
| 16 | கரூர் | | | | 2 |
| | கரூர் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, புகலூர் | 1 | |
| | | 2 | உஸ்வத்துன் ஹஸானா ஓரியண்டல் அராபிக் மகளிர் மேல்நிலைப் பள்ளி, பள்ளபட்டி | 1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | 2 | |
| 17 | அரியலூர் | | | | 6 |
| | அரியலூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, அரியலூர் | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி, ஜெயங்கொண்டம் | 3 | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, விளந்தை ஆண்டிமடம் | 2 | |
| | | | மொத்தம் | 6 | |
| 18 | பெரம்பலூர் | | | | 2 |
| | பெரம்பலூர் | 1 | அரசு மேல்நிலைப்பபள்ளி, பெரம்பலூர் | 2 | |
| | | | மொத்தம் | 2 | |
| 19 | திருவாரூர் | | | | 6 |
| | திருவாரூர் | 1 | அரசு பெண்கள்மேல் நிலைப்பள்ளி, குடவாசல் | 1 | |
| | | 2 | அரசு மேல்நிலைப்பள்ளி, பரவாக்கோட்டை | 1 | |
| | | 3 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பொதக்குடி | 1 | |
| | | 4 | தேசியமேல்நிலைப்பள்ளி, மன்னார்குடி | 1 | |
| | | 5 | பின்லே மேல்நிலைப்பள்ளி, மன்னார்குடி | 1 | |
| | | 6 | சுவாமி தயானந்தா மேல்நிலைப்பள்ளி மஞ்சக்குடி | 1 | |
| | | | மொத்தம் | 6 | |
| 20 | தஞ்சாவூர் | | | | 3 |
| | தஞ்சாவூர் | 1 | தூய வளனார் (ம) மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம். | 1 | |
| | | 2 | நகர மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம். | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, மேலஉளூர் | 1 | |
| | | | மொத்தம் | 3 | |
| 21 | கடலூர் | | | | 4 |
| | கடலூர் | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, புவனகிரி. | 1 | |
| | | 2 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கடலூர். | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, மங்கலம்பேட்டை. | 1 | |
| | | 4 | புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கடலூர். | 1 | |
| | | | மொத்தம் | 4 | |
| 22 | திருவண்ணாமலை | | | | 7 |
| | திருவண்ணாமலை | 1 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, போளூர் | 2 | |
| | | 2 | அரசு பெண்கள்மேல்நிலைப்பள்ளி, போளூர் | 1 | |
| | | 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, செங்காடு | 1 | |
| | | 4 | செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி, அத்திப்பட்டு | 1 | |
| | | 5 | அரசு மேல்நிலைப்பள்ளி . தெள்ளாறு | 1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திருவண்ணாமலை | 6 | அரசு மேல்நிலைப்பள்ளி, பெரணமல்லூர் | 1 | |
| | | | மொத்தம் | 7 | |
| 23 | வேலூர் | | | | 1 |
| | வேலூர் | 1 | அரசு மேல்நிலைப்பள்ளி, வெண்ணம்பள்ளி | 1 | |
| | | | மொத்தம் | 1 | |
| 24 | திருவள்ளூர் | | | | 4 |
| | திருவள்ளூர் | 1 | டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருத்தணி | 1 | |
| | | 2 | அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, பூந்தமல்லி | 3 | |
| | | | மொத்தம் | 4 | |
| 25 | சென்னை | | | | 4 |
| | சென்னை | 1 | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை-49 | 1 | |
| | | 2 | அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளி, உ௫ர், அடையார்,சென்னை-90 | 1 | |
| | | 3 | சென்னை மேல்நிலைப் பள்ளி, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35 | 1 | |
| | | 4 | சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம், சென்னை.34 | 1 | |
| | | | மொத்தம் | 4 | |
| | | | மொத்த பணியிடங்கள் | | 94 |

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
18/12/23

நகல்:-

இணை இயக்குநர் ந.க.எண்.036847/எம்/இ3/2022 நாள்:19.12.23

தகவலுக்காக இந்த அரசாணையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் அனுப்பப்படுகிறது.

19/12/23
இணை இயக்குநர்
(நாட்டு நலப்பணித் திட்டம்)
19/12/23

பெறுநர்:-

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்